**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.39/2023**

**2025 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னத்துரை | ஜாதி | : | |
| த.பெ | : | சங்கப்பன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வளையப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 53/2025 |

தேதி : 24.02.2025

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதியின் கணவர் ஆவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். மேலும் 05.05.2015 தேதியிட்ட இவ்வழக்கின் 1வது பிரதிவாதியின் மகள் கருப்பாயி என்பவர் கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 26.12.2016 தேதியில் மேற்கண்ட கருப்பாயி இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 21.09.2021 தேதியில் ஆத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.73/2019 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மறறும் தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 10.02.2022 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 23.02.2023 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து 1வது பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 26.02.2024 தேதியிட்ட வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை அசல் நீ.ம.சா.ஆ.1 ஆகவும், ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பும் தீர்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/.Thiru.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.